# 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 1 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை**

அ) அளவற்ற வளங்கள் ஆ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி
இ) பற்றாக்குறை ஈ) எண்ணற்ற விருப்பங்கள்

**2) எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?**

அ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
ஆ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களைவும் பற்றியது
இ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
ஈ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை

**3) மனிதனுடைய வாழ்க்கையில் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.**

அ) இலயனல் ராபின்ஸ் ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல்
இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்

**4) விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?**

அ) இறுதி சமநிலை வருவாய் ஆ) இறுதி சமநிலைச் செலவு
இ) விலை ஈ) மொத்தச் செலவு

**5) நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணைஎன்ற நூலின் ஆசிரியர்**

அ) ஆடம் ஸ்மித் ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல்
இ) இலயனல் ராபின்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்

**6) அங்காடி என்பது**

அ) பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஆ) பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
இ) விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஈ) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்.

**7) பொருளாதாரத்தின் தந்தை யார்?**

அ) ஆடம் ஸ்மித் ஆ) பால் அ சாமுவேல்சன்
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) மாக்ஸ் முல்லர்

**8) வளர்ச்சி இலக்கணம் என்பது**

அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
ஆ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்
இ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்
ஈ) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது

**9) நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?**

அ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
ஆ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்

www.Padasalai.Net

இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத் தொடர்பு

**10) சமநிலை விலை என்பது அந்த விலையில்**
அ) மிகைத்தேவை பூஜ்ஜியம்
ஆ) எல்லாம் விற்கப்படுகிறது
இ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
ஈ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்

**11) பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல் என்று கூறுவர். ஏனெனில்,**
அ) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு
ஆ) பரிசோதனைகள்
இ) மேற்கூறிய அனைத்தும்
ஈ) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.

**12) பொருந்தா ஒன்றைக் கண்டறிக.**
அ)"நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"
ஆ)"பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்"
இ)"மற்றவை மாறாதிருக்கும்போது"
ஈ)"பொருளாதாரக் கோட்பாடுகள்"

**13) பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?**
அ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு
இ) விலைக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

**14) விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்றுவழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.**
அ) பால் அ சாமுவேல்சன் ஆ) ஆல்ஃபிரட் மார்ஷல்
இ) இலயனல் ராபின்ஸ் ஈ) ஆடம் ஸ்மித்

**15) பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?**
அ) மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித் இ) ராபர்ட்சன் ஈ) ராபின்ஸ்

**16) பயன்பாடு என்பது**
அ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
ஆ) பண்டங்களின் மொத்த மதிப்பு
இ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

**17) கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?**
அ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது
ஆ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 25% அதிகரித்துள்ளது.
இ) கடந்த ஆண்டுபொது விலை 4% அதிகரித்துள்ளது.
ஈ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது

**18) ______ பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்.**
அ) வருவாய் ஆ) சேவைகள் இ) அங்காடிகள் ஈ) பண்டங்கள்

www.Padasalai.Net

**19) பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க.**
அ) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது
ஆ) இது மகிழ்வுக்கு சமமானது
இ) இது பயனுக்கும் சமமானது
ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது

**20) தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை**
அ) நெறியுரை அறிவியல் ஆ) இயல்புரை அறிவியல்
இ) பகுத்தாய்வு முறை ஈ) தொகுத்தாய்வு முறை

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 2 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

www.Padasalai.Net

**1) சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்**
அ) ஹிக்ஸ் ஆ) எட்ஜ்வொர்த் இ) கீன்ஸ் ஈ) ஆலன்

**2) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு ________**
அ) பூஜ்ஜியமாக ஆ) எதிர்மறையாக இ) உச்சமாக ஈ) குறைவாக

**3) தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது ________**
அ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியின்மை
இ) மிகைத் தேவை ஈ) அலகுத் தேவை நெகிழ்ச்சி

**4) மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது ________**
அ) செங்குத்து ஆ) மெதுவாக சரியும் இ) படுகிடை ஈ) விரைந்து சரியும்

**5) காஸன் முதல் விதி ________ என்றும் அழைக்கப்படுகிறது**
அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
இ) தேவை விதி
ஈ) சமஇறுதி நிலை பயன்பாட்டு விதி

**6) முரண்பட்டதை தெரிவு செய்க**
அ) வசதிபண்டங்கள் ஆ) விவசாயப் பொருட்கள்
இ) அத்தியாவசிய பண்டங்கள் ஈ) ஆடம்பர பண்டங்கள்

**7) சம நோக்கு வளைகோடுகள்**
அ) படுக்கைக் கோடுகள் ஆ) எதிர்மறைச் சரிவுடையது
இ) செங்குத்துக் கோடுகள் ஈ) நேர்மறைச் சரிவுடையது

**8) இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்.**
அ) ஜே.ஆர்.ஹிக்ஸ் ஆ) மார்ஷல் இ) ஆர்.ஜி.டி.ஆலன் ஈ) ஸ்டிக்லர்

**9) கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?**
அ) அதிக மானியம் வழங்குவதால் ஆ) வட்டி வீதம் அதிகரிப்பதால்
இ) வரி அதிகரிப்பதால் ஈ) விலை அதிகரிப்பதால்

**10) நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது ________ இருக்கும்.**

அ) குறைவாக ஆ) சமமாக இ) கூடுதலாக ஈ) அதிகபட்சமாக

**11) தகுவிலை ரூ.250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ.200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.**

அ) 175 ஆ) 200 இ) 50 ஈ) 375

**12) சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?**

அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்

இ) எதுவுமில்லை ஈ) வார்த்தைப்படுத்துதல்

**13) சம அளவு திருப்தியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடையவை**

அ) இயல்பெண் ஆய்வு ஆ) சம நோக்கு வளைகோடுகள்

இ) அளிப்பு விதி ஈ) தேவை விதி

**14) கீழ்க்கண்ட வாய்ப்பபாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம்**

அ) TUn - TUn-1 ஆ) TUn - TUn+1 இ) TUn + TUn+1 ஈ) TUn - TUn+1

**15) நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்**

அ) மார்ஷல் ஆ) ராபினஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) ரிக்கார்டோ

**16) தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் ________ இருப்பதால்**

அ) அளிப்பு ஆ) தேவை இ) பற்றாக்குறை ஈ) அபரிமிதமான

**17) தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ________**

அ) மார்ஷல் ஆ) கீன்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) பெர்கூசன்

**18) கீழ்க்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது**

அ) காஸன் விதி ஆ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதி

இ) அளிப்புவிதி ஈ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி

**19) சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ________**

அ) இயல்பெண் ஆய்வு ஆ) உளவியல் ஆய்வு

இ) தரவரிசை ஆய்வு ஈ) பண்பளவை ஆய்வு

**20) கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகிறது**

அ) தேவை கூடுதல் மற்றும் குறைதல் ஆ) மேற்காண் அனைத்தும்

இ) தேவை இடப்பெயர்வு ஈ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 3 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்குக் காரணமாக அமைவது எது?**

அ) மேற்காணும் அனைத்தும் ஆ) நிதி இ) தொழில் நுட்பம் ஈ) மேலாண்மை

**2) சராசரி உற்பத்தி (AP) யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம்**

அ) TP/N ஆ) TP/MP இ) TP/N ஈ) TP/N

**3) ஒரு நிறுவனம் 5 அலகுகள் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி 24 அலகுகளை உற்பத்தி செய்கிறது. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும்போது உற்பத்தி 30 அலகுகளாக உயர்கிறது எனில் சராசரி உற்பத்தியை (AP) கணக்கிடு.**

அ) 24 ஆ) 6 இ) 30 ஈ) 5

**4) ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி**

அ) மொத்த உற்பத்தி ஆ) சராசரி உற்பத்தி

இ) ஆண்டு உற்பத்தி ஈ) இறுதிநிலை உற்பத்தி

**5) சம உற்பத்திக் கோட்டின் வேறு பெயர்**

அ) நெகிழ்ச்சியற்ற தேவைக் கோடு ஆ) சம உற்பத்தி வளைகோடு

இ) நெகிழ்ச்சியற்ற அளிப்பு கோடு ஈ) சம - இறுநிலை பயன்பாடு

**6) நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி**

அ) குறைந்து செல் விகித அளவு ஆ) மாறும் விகித அளவு

இ) வளர்ந்து செல் விகித அளவு ஈ) மாறா விகித அளவு

**7) ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?**

அ) நுகர்வு சார்பு ஆ) சேமிப்பு சார்பு

இ) முதலீட்டு சார்பு ஈ) உற்பத்தி சார்பு

**8) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன**

அ) உழைப்பு மற்றும் மூலதனம் ஆ) நிலம் மற்றும் மூலதனம்

இ) நிலம் மற்றும் உழைப்பு ஈ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு

**9) உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது?**

அ) (MRTS) ம் விலை வீதமும் சமமாக இருந்தால்

ஆ) சம உற்பத்திக் கோடும் சம உற்பத்தி செலவு கோடும் வேறுபட்டிருந்தால்

இ) (MRTS) விலை வீதத்தை விட குறைவானால்

ஈ) இறுதிநிலை தொழில் நுட்ப பதிலீட்டு வீதம் (MRTS)

**10) சராசரி உற்பத்தி குறையும்போது இறுதிநிலை உற்பத்தி**

அ) அதிகரிக்கும்

ஆ) சராசரி உற்பத்தியை விட அதிகமாக இருக்கும்

இ) சராசரி உற்பத்தியை விட குறைவாக இருக்கும்

ஈ) சராசரி உற்பத்தியை விட அதிகமாக இருக்கும் மற்றும் அதிகரிக்கும்

**11) நீண்ட கால உற்பத்தி சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?**

அ) மாறா விகித அளவு விளைவு விதி ஆ) அளிப்பு விதி

இ) விகித அளவு விளைவு விதி ஈ) தேவை விதி

**12) தொழில் முனைவோரின் முக்கிய குணம் உறுதியற்ற தன்மையை பொறுத்துக் கொள்ளல் என்ற கூற்றை கூறியவர் யார்?**

அ) ஆடம் ஸ்மித் ஆ) கம்பீட்டர் இ) ஜே. பி. கிளார்க் ஈ) நைட்

**13) உற்பத்திக் காரணிகளை 5 சதவீதம் அதிகரித்தால், வெளியீடு 5 சதவீதத்திற்கு மேல் அதிகரிப்பது எந்த விகித விளைவு விதியை சார்ந்தது**

அ) மேற்காணும் அனைத்தும்

ஆ) மாறா விகித அளவு விளைவு விதி

இ) குறைந்து செல் விளைவு விகித விதி

www.Padasalai.Net

ஈ) வளர்ந்து செல் விளைவு விகித விதி

**14) காப் - டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாக கொண்டது?**

அ) குறைந்து செல் விகித விளைவு விதி

ஆ) மேற்காணும் அனைத்தும்

இ) மாறா விகித விளைவு விதி

ஈ) வளர்ந்து செல் விகித விளைவு விதி

**15) பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு**

அ) அதிகிரிக்கும் ஆ) பூஜ்யம் இ) நேர்மறை ஈ) எதிர்மறை

**16) கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?**

அ) இயங்கும் தன்மையுடையது ஆ) குறை அளிப்பு

இ) இயற்கையின் கொடை ஈ) பலவகைப்படும்

**17) குறுகிய கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?**

அ) தேவை விதி ஆ) சம அளவு உற்பத்திக் கோடு

இ) விகித அளவு விளைவு விதி ஈ) மாறும் விகித அளவு விளைவு விதி

**18) எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?**

அ) தொழிலமைப்போர் ஆ) நிலம் இ) மூலதனம் ஈ) உழைப்பாளர்

**19) மற்ற பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும், மனித முயற்சியால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள்**

அ) மூலதனம் ஆ) தொழிலமைப்பு இ) உழைப்பு ஈ) நிலம்

**20) உற்பத்திச் சார்பு இவற்றிற்கிடையே உள்ள தொடர்பை விளக்குகிறது.**

அ) உள்ளீட்டு அளவிற்கும் உள்ளீட்டின் விலைக்கும் உள்ள தொர்பு

ஆ) உள்ளீட்டு விலைக்கும், வெளியீட்டின் விலைக்கும் இடையே உள்ள தொர்பு

இ) உள்ளீட்டு அளவிற்கும், வெளியீட்டு அளவிற்கும் இடையே உள்ள தொர்பு

ஈ) உள்ளீட்டு விலைக்கும், வெளியீட்டின் அளவிற்கும் இடையே உள்ள தொர்பு

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 4 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ________ உடன் கூடுதலாக பெறுவது.**

அ) மொத்த வருவாய் ஆ) மொத்தச் செலவு

இ) மொத்த விற்பனை ஈ) மொத்த உற்பத்தி

**2) உற்பத்திக்கு ஏற்றாற் போல் மாறும் செலவு ________ செலவு எனப்படும்.**

அ) மாறும் ஆ) மாறா இ) பண ஈ) மொத்த

**3) ஒரு அலகு உற்பத்திக்கான செலவு ________ செலவாகும்.**

அ) மாறும் ஆ) இறுதிநிலை இ) மொத்த ஈ) சராசரி

**4) கூலி ________ செலவுக்கு எடுத்துக்காட்டாகும்.**

அ) மாறும் ஆ) இறுதிநிலை இ) மாறா ஈ) வாய்ப்பு

**5) ஒரு அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கிடைக்கும் வருவாய் ________ வருவாயாகும்.**

அ) இறுதிநிலை ஆ) மொத்த இ) இலாபம் ஈ) சராசரி

**6) தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு ________**

அ) உள்ளுறு செலவு ஆ) உண்மைச் செலவு

இ) வெளியுறு செலவு ஈ) பணச் செலவு

**7) ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு**

அ) மொத்தச் செலவு ஆ) மாறாச் செலவு

இ) இறுதிநிலைச் செலவு ஈ) மாறும் செலவு

**8) வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் ________ செலவாகும்.**

அ) பண ஆ) சமூக இ) மாறா ஈ) பொருளாதார

**9) செலவுச் சார்புகளை ________ சார்புகள் எனலாம்.**

அ) முதலீடு ஆ) உற்பத்தி இ) நுகர்வு ஈ) தேவை

**10) பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ________ வருவாயாகும்.**

அ) மொத்த ஆ) சராசரி இ) இறுதிநிலை ஈ) இலாபம்

**11) ஒரு புத்தகம் ரூ.10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்**

அ) 200 ஆ) 100 இ) 400 ஈ) 300

**12) சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு**

அ) TAC / Q ஆ) TPC / Q இ) TC / Q ஈ) TVC / Q

**13) சராசரிச் செலவுக்கான வாய்பாடு**

அ) AFC / Q ஆ) TVC / Q இ) AVC / Q ஈ) TC / Q

**14) பணச் செலவை ________செலவு என்றும் அழைக்கலாம்.**

அ) உண்மை ஆ) சமூக இ) உள்ளுறு ஈ) வெளியுறு

**15) வெளியுறு செலவுகள் என்பது**

அ) கையிலிருந்து செய்யும் செலவுகள் ஆ) சமூகச் செலவு

இ) மூழ்கும் செலவுகள் ஈ) உண்மைச் செலவுகள்

**16) விலை நிலையாக இருக்கும்போது AR கோடு MR கோட்டுக்கு ________ ஆக இருக்கும்.**

அ) அதிகமாக ஆ) குறைவாக இ) சமமாக ஈ) தொடர்பற்று

**17) செலவு என்பது**

அ) மாறாச் செலவு ஆ) விலை இ) உற்பத்தி ஈ) மதிப்பு

**18) நீண்ட கால சராசரி செலவுக் கோடு ________ கோடு என அழைக்கப்படுகிறது**

அ) திட்ட ஆ) உற்பத்தி இ) விற்பனை ஈ) தேவைக்

**19) உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும் மாறாத செலவுகள் ________**

அ) உண்மைச் செலவு ஆ) மாறாச் செலவு

இ) சமூகச் செலவு ஈ) மாறும் செலவு

**20) மொத்த மாறாச் செலவு 100, மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.**

அ) 175 ஆ) 125 இ) 325 ஈ) 225

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 5 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) கீழ்க்கண்டவற்றுள் எந்த வகை அங்காடியில் நுகர்வோர் அதிகம் சுரண்டப்படுகிறார்கள்?**

அ) முற்றுரிமை ஆ) சில்லோர் முற்றுரிமை

இ) நிறைவு போட்டி ஈ) முற்றுரிமையாளர் போட்டி

**2) முற்றுரிமை போட்டியில் சராசரி வருவாய் கோடு _______**

அ) ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ளது ஆ) முற்றிலும் நெகிழ்ச்சி உள்ளது

இ) பெருமளவு நெகிழ்ச்சியுள்ளது ஈ) முற்றிலும் நெகிழ்ச்சியற்றது

**3) முற்றுரிமை போட்டியின் முக்கிய பண்பு _______**

அ) ஒரு விற்பனையாளர் ஆ) ஒரே விதமான உற்பத்தி

இ) விற்பனைச் செலவு ஈ) ஒரு வாங்குபவர்

**4) கீழ்க்கண்டவற்றுள் உபரிதிறன் இல்லாதது _______**

அ) சில்லோர் முற்றுரிமை ஆ) முற்றுரிமை

இ) முற்றுரிமை போட்டி ஈ) நிறைவுப் போட்டி

**5) கீழ்க்கண்டவற்றுள் எந்தவகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும்?**

அ) இருமுக முற்றுரிமை ஆ) நிறைவுப் போட்டி

இ) முற்றுரிமை ஈ) சில்லோர் முற்றுரிமை

**6) விலையின் மற்றொரு பெயர் _______**

அ) மொத்த வருவாய் ஆ) சராசரி வருவாய்

இ) இறுதிநிலை வருவாய் ஈ) சராசரி செலவு

**7) முற்றுரிமை போட்டி _______ ஆகும்.**

அ) முற்றுரிமை ஆ) நிறைகுறை போட்டி

இ) இருவர் முற்றுரிமை ஈ) சில்லோர் முற்றுரிமை

**8) நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு _______**

அ) படுகிடை ஆ) நேர்மறை சரிவு

இ) எதிர்மறை சரிவு ஈ) நிலையானது

**9) குழுச்சமநிலை ஆராய்வது _______**

அ) முற்றுரிமை ஆ) இருவர் முற்றுரிமை

இ) முற்றுரிமை போட்டி ஈ) தூய போட்டி

**10) விலை தலைமை அம்சம் கொண்டது _______**

அ) சில்லோர் முற்றுரிமை ஆ) நிறைவு போட்டி

இ) முற்றுரிமை ஈ) முற்றுரிமையாளர் போட்டி

**11) நிறுவனத்தின் சமநிலை என்பது**

அ) MR = Price ஆ) MC > MR இ) MC < MR ஈ) MC = MR

**12) எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?**

அ) TR < TC ஆ) TR- MC இ) TR = TC ஈ) TR > TC

**13) முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில் _______ பெறும்.**

www.Padasalai.Net

அ) நஷ்டம் ஆ) அதிக நஷ்டம் இ) இயல்பு இலாபம் ஈ) அதிக இலாபம்

**14) முற்றுரிமையில் MR கோடு _______கோட்டிற்கு கீழிருக்கும்.**

அ) MC ஆ) AR இ) AC ஈ) TR

**15) எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?**

அ) சில்லோர் முற்றுரிமை ஆ) முற்றுரிமை

இ) முற்றுரிமைபோட்டி ஈ) நிறைவு போட்டி

**16) எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்.**

அ) சில்லோர் முற்றுரிமை ஆ) இருவர் முற்றுரிமை

இ) நிறைவு போட்டி ஈ) முற்றுரிமை போட்டி

**17) நிறைவு போட்டி அனுமானிப்பது _______**

அ) வேறுபடுத்தப்பட்ட பண்டம் ஆ) ஆடம்பர பண்டம்

இ) உற்பத்தியாளர் பண்டம் ஈ) ஒத்த தன்மை பண்டம்

**18) கீழ்க்கண்டவற்றுள் எது முற்றுரிமைப் போட்டியின் இயல்புகள்?**

அ) பண்ட வேறுபாடு ஆ) உள்ளே நுழைய முடியாது

இ) ஒரு விற்பனையாளர் ஈ) சில விற்பனையாளர்

**19) விலைபேதம் காட்டுதலின் விளைவு _______ ஆகும்.**

அ) குறைவான உற்பத்தி ஆ) பல்வேறு விலை

இ) அதிக இலாபம் மற்றும் பல்வேறு விலை ஈ) அதிக இலாபம்

**20) விற்பனை செலவிற்கு உதாரணம் _______**

அ) கச்சாப்பொருள் விலை ஆ) விளம்பர செலவு

இ) போக்குவரத்துச் செலவு ஈ) கொள்முதல் செலவு

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 6 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) கடன் நிதி வட்டிக் கோட்பாடானது**

அ) தொன்மைக் கோட்பாடு ஆ) மரபுக் கோட்பாடு

இ) நவீன கோட்பாடு ஈ) புதிய தொன்மைக் கோட்பாடு

**2) பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு

இ) வட்டிக்கோட்பாடு ஈ) கூலிக்கோட்பாடு

**3) எதனைப் பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்?**

அ) அமைப்பு ஆ) உழைப்பாளி இ) மூலதனம் ஈ) நிலம்

**4) துய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்**

அ) நட் விக்சல் ஆ) N. W. சீனியர் இ) ஆல்ஃப்ரட் மார்ஷல் ஈ) போம்போவர்க்

**5) எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.**

அ) கீன்ஸ் ஆ) நைட் இ) வாக்கர் ஈ) ஹாலே

**6) தொன்மை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?**

அ) வாக்கர் ஆ) மார்ஷல் இ) ரிக்கார்டோ ஈ) கீன்ஸ்

**7) புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர் ______**

அ) கீன்ஸ் ஆ) நைட் இ) ஹாலே ஈ) கம்பீட்டர்

**8) உழைப்பாளருக்கான வெகுமதி ______**

அ) வாரம் ஆ) வட்டி இ) இலாபம் ஈ) கூலி

**9) பணக்கூலியின் வேறுபெயர்.**

அ) மாற்றுக்கூலி ஆ) உண்மைக்கூலி

இ) சரியான கூலி ஈ) பெயரளவுக் கூலி

**10) எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.**

அ) தனிப்பட்ட நோக்கம் ஆ) ஊக நோக்கம்

இ) முன்னெச்சரிக்கை நோக்கம் ஈ) பரிமாற்ற நோக்கம்

**11) "ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்" இதைக் கூறியவர் யார்?**

அ) J.S. மில் ஆ) மார்ஷல் இ) பென்ஹாம் ஈ) வாக்கர்

**12) போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது?**

அ) வாக்கர் ஆ) மார்ஷல் இ) ரிக்கார்டோ ஈ) கீன்ஸ்

**13) கீன்சின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு வழங்கப்படுகிறது.**

அ) நீர்மை விருப்பக் கோட்பாடு ஆ) துய்ப்பு தவிர்ப்பு கோட்பாடு

இ) ஏஜியோ கோட்பாடு ஈ) கடன் நிதிக் கோட்பாடு

**14) நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாதசக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்.**

அ) கிளார்க் ஆ) JS மில் இ) வாக்கர் ஈ) ரிக்கார்டோ

**15) கடன் நிதிக் கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும்.**

அ) S + BC + DH + DI ஆ) S + DS + BC + DI

இ) S + BC + DH + DS ஈ) I + DS + DH + BC

**16) பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது எதனுடன் தொடர்புடையது?**

அ) உற்பத்திக் காரணிகள் ஆ) நிறுவனங்கள்

இ) தனி நபர் ஈ) வணிகர்கள்

**17) போலிவாரம் இதனால் தோன்றுகிறது**

அ) எதுவுமில்லை ஆ) வீட்டில் தயார் செய்தவை

இ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் ஈ) இறக்குமதிப் பொருட்கள்

**18) தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை அல்லது வருமானத்தை பகிர்ந்தளிப்பதென்பது ______**

அ) தனி நபர் பகிர்வு ஆ) பண்டங்களின் பகிர்வு

இ) செயல்முறைப் பகிர்வு ஈ) பணிகளின் பகிர்வு

**19) இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்.**

அ) உழைப்பு ஆ) நிலம் இ) அமைப்பு ஈ) மூலதனம்

**20) முதலை பயன்படுத்துவதற்கான வெகுமதி**

அ) கூலி ஆ) இலாபம் இ) வட்டி ஈ) வாரம்

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 7 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டுவந்தவர்.**
அ) டாக்டர். இராஜேந்திரபிரசாத் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) இந்திரா காந்தி ஈ) P.C . மஹலனோபிஸ்

**2) வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்.**
அ) ஏழு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) பத்து

**3) கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கம் பகுதி ________**
அ) கொச்சின் ஆ) அனந்தபூர் இ) கோலார் ஈ) இராமகிரி

**4) மக்கள்தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு.**
அ) மக்கள் தொகையியல் ஆ) புவியியல் இ) தத்துவவியல் ஈ) இட அமைப்பியல்

**5) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவது குறிப்பிடுவது**
அ) GDP ஆ) தலாவருமானம் இ) NNP ஈ) GNP

**6) இந்த கொள்கையின் அடிப்படையில் காந்தியவர் பொருளாதாரம் இயங்குகிறது.**
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) கோபால கிருஷ்ண கோகலே
இ) சமதர்மச் சிந்தனை ஈ) Option 5 உ) ஒழுக்க நெறி அடிப்படை

**7) ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது**
அ) கச்சா இறப்பு வீதம் ஆ) கச்சா பிறப்பு வீதம்
இ) சோர்வு வீதம் ஈ) இறப்பு வீதம்

**8) கலப்புப்பொருளாதாரம் என்பது ________**
அ) பொதுத்துறை மற்றும் வங்கிகள்
ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது
இ) தனியார் துறை மற்றும் வங்கிகள்
ஈ) பொதுத்துறைகள் மட்டும்

**9) திருவள்ளுவரின் பொருளதாரக் கருத்துகள் குறிப்பாகக் கூறுவது.**
அ) வேளாண்மை ஆ) செல்வம்
இ) மேற்காண் அனைத்தும் ஈ) வறுமை சதாயத்தின் சாயம்

**10) இந்தியப் பொருளாதாரம் ________ காரணமாக வலிமையின்மையாக இருக்கிறது.**
அ) பொருளாதாரச் சமநிலையின்மை ஆ) நகரமயமாதல்
இ) கலப்புப் பொருளாதாரம் ஈ) போதுமான வேலை வாய்ப்புகள் இருப்பது

**11) R.R அம்பேத்கர் இந்தியப் பொருளாதாரப் பிரச்சனைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார்.**
அ) குறைந்த நிலவுடைய மற்றும் தீர்வுகள் ஆ) சமதர்மப் பொருளாதாரம்
இ) இந்திய ரூபாயின் சிக்கல்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

**12) V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்.**
அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) J.M. கீன்ஸ் இ) காலின் கிளார்க் ஈ) ஆடம் ஸ்மித்

**13) கீழ்கண்டவற்றுள் எது முன்னேற்றம் அடைந்த நாடு?**
அ) ஸ்ரீலங்கா ஆ) பிரான்ஸ் இ) மெக்ஸிகோ ஈ) கானா

**14) காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?**

www.Padasalai.Net

அ) J.C. குமரப்பா ஆ) A.K. சென் இ) ஜவஹர்லால் நேரு ஈ) V.K.R.V இரால்

**15) எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை நுறு கோடியைத் தாண்டியது?**

அ) 2000 ஆ) 1991 இ) 2001 ஈ) 2005

**16) மக்கள் தொகையில் 1961-ம் வருடம் ________ எனப்படுகிறது.**

அ) மக்கள் தொகை வெடிப்பு வருடம் ஆ) சிறிய பிரிவினை வருடம்

இ) நகர மயமாதல் வருடம் ஈ) பெரும் பிரிவினை வருடம்

**17) பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு**

அ) 2008 ஆ) 2010 இ) 1998 ஈ) 2000

**18) தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?**

அ) ஜவ1ஹர்லால் நேரு ஆ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ஈ) V.K.R.V இரால்

**19) ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது.**

அ) கச்சா இறப்பு வீதம் ஆ) மகப்பேறு இறப்பு வீதம்

இ) கச்சா பிறப்பு வீதம் ஈ) கச்சா சிசு வீதம்

**20) மக்கள் தொகை அடர்த்தி என்பது.**

அ) மக்கள் தொகை / வேலைவாய்ப்பு

ஆ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை

இ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு

ஈ) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 8 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம்**

அ) 2007 – 2012 ஆ) 1997 – 2002 இ) 2002 – 2007 ஈ) 1992 - 1997

**2) 1956ன் தொழிற்கொள்கையின் நோக்கம்**

அ) குடிசைத் தொழில்களை மட்டும் முன்னேற்றுவது

ஆ) தனியார் துறையை மட்டும் முன்னேற்றுவது

இ) வேளாண் துறையை மட்டும் முன்னேற்றுவது

ஈ) பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது

**3) இந்தியாவின் மிகப்பழமையான பெரிய அளவிலான தொழில்**

அ) இருப்பு ஆ) சணல் இ) பருத்தி ஈ) சிமெண்ட்

**4) முதலாம் உலகப்போர் தொடங்கப்பட்ட ஆண்டு**

அ) 1941 ஆ) 1841 இ) 1914 ஈ) 1814

**5) இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு (CALICUT) வாஸ்கோடாகாமா வருகை புரிந்த வருடம்**

அ) 1849 ஆ) 1498 இ) 1489 ஈ) 1948

**6) 1614-ல் தாமஸ் ரோ யாரிடம் அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றார்?**

அ) நூர்ஜஹான் ஆ) ஜஹாங்கீர் இ) அக்பர் ஈ) ஷாஜகான்

**7) இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்**

அ) மகாராஸ்டிரா ஆ) தமிழ்நாடு இ) கேரளா ஈ) வங்காளம்

www.Padasalai.Net

**8) இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்.**

அ) N.R. விஸ்வநாதன் ஆ) காந்தி

இ) M.S. சுவாமிநாதன் ஈ) விஸ்வேஸ்வரையா

**9) இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு**

அ) 1948 ஆ) 1991 இ) 2000 ஈ) 1456

**10) வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு**

அ) 1990 – 1992 ஆ) 2000 – 2001 இ) 1981 – 1983 ஈ) 1989 - 1991

**11) முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான நோக்கம்**

அ) வங்கி ஆ) தொழில் இ) சேவை ஈ) வேளாண்மை

**12) இந்தியாவை ஆளும் உரிமை கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசுக்கு மாற்றப்பட்ட ஆண்டு**

அ) 1868 ஆ) 1878 இ) 1858 ஈ) 1885

**13) 1969-ல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை**

அ) 12 ஆ) 16 இ) 10 ஈ) 14

**14) 2016-ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சி அறிக்கையின் படி 188 நாடுகளில் இந்தியாவின் தரம்**

அ) 135 ஆ) 130 இ) 131 ஈ) 145

**15) பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்**

அ) சோசலிச முறையிலான சமூகம்

ஆ) சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி

இ) விரைவான மற்றும் அதிகமான ஒருங்கிணைந்த வளர்ச்சி

ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி

**16) வாழ்க்கைதரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்**

அ) D. மோரிஸ் ஆ) பிஸ்வாஜித் இ) நேரு ஈ) திட்டக்குழு

**17) 1993ல் முன் பதிவு நீக்கப்பட்ட தொழில்துறை**

அ) அணு ஆற்றல் ஆ) அணு கனிமங்கள்

இ) செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில் ஈ) இரயில்வே துறை

**18) மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்னை உருவாக்கியவர்**

அ) தாகூர் ஆ) அமர்த்தியா குமார் சென்

இ) ஜவகர்லால் நேரு ஈ) M. K. காந்தி

**19) திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு**

அ) 1952 ஆ) 1950 இ) 1960 ஈ) 1955

**20) வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்**

அ) வருவாய் ஈட்ட ஆ) தொழில் முற்றுரிமை

இ) சமூக நலம் ஈ) தனியார் சமூக நலம்

www.Padasalai.Net

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 9 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) தொழில் உடைமையை பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுவது _______ எனப்படும்.**

அ) தனியார் மயமாக்கல் ஆ) தேசியமயமாக்கல்
இ) தாராளமயமாக்கல் ஈ) உலகமயமாக்கல்

**2) LPG க்கு எதிரான வாதம் ________**

அ) நவீன மயமாக்கல் ஆ) மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு
இ) பொருளாதார வளர்ச்சி ஈ) அதிக முதலீடு

**3) உழவர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் _______ கடன் பெற முடியாது.**

அ) பிராந்திய கிராமப்புற வங்கிகளின் ஆ) பொதுத்துறை வங்கிகளின்
இ) இவை அனைத்தும் ஈ) கூட்டறவு வங்கிகளின்

**4) நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக _______ துறைக்கானது.**

அ) போக்குவரத்துத் துறை ஆ) வங்கித்துறை
இ) காப்பீட்டுத் துறை மற்றும் வங்கித்துறை ஈ) காப்பீட்டுத் துறை

**5) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது**

அ) ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது
ஆ) ஒரு முனை வரி
இ) அடுக்கடுக்கு விளைவுகளைக் கொண்டது
ஈ) மதிப்பு கூட்டப்பட்ட வரி போன்றது

**6) உலக அளவில் இந்தியா ________ உற்பத்தியில் மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.**

அ) தேயிலை ஆ) காப்பி இ) மதுப்பொருட்கள் ஈ) பழங்கள்

**7) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் _______ அமல்படுத்தப்பட்டது**

அ) 2017 ஜீலை 1ந் தேதி ஆ) 2016 ஜீலை 1ந் தேதி
இ) 2017 ஜனவரி 1ந் தேதி ஈ) 2016 ஜனவரி 1ந்தேதி

**8) இன்றைய நாட்களில் வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாடும் ________ இருக்க வேண்டும்.**

அ) தடையில்லா வாணிபம் ஆ) முதலாளித்துவ அமைப்பு
இ) சார்ந்து ஈ) ஒன்றையொன்று சார்ந்து

**9) வெளிநாட்டு முதலீடு ________ உள்ளடக்கியது.**

அ) FPI மற்றும் FFI ஆ) FDI மற்றும் FPI
இ) FDI மட்டும் ஈ) FDI மற்றும் FFI

**10) ராஜ் கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட "இந்து வளர்ச்சி வீதம்" என்பது _______ குறிக்கும்.**

அ) இந்து மக்கள் தொகையின் அதிகமான விகிதம்
ஆ) நிலையான GDP
இ) குறைவான பொருளாதார வளர்ச்சி
ஈ) எதுவுமில்லை

**11) விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ________ ஆகும்.**

அ) ஆலோசனைக் குழு ஆ) ஆலோசனைக் குழு மற்றும் சட்டபூர்வமான குழு
இ) சட்டபூர்வமான குழு ஈ) எதுவுமில்லை

**12) EPI என்பதன் விரிவாக்கம்**

அ) வெளிநாட்டு தனியார் முதலீடு
ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு

www.Padasalai.Net

இ) வெளிநாட்டு செலாவணி தனியார் முதலீடு
ஈ) வெளிநாட்டு நேரடி முதலீடு

**13) கீழ்க்கண்டவற்றுள் எது தனியார் மயமாதலைக் குறிக்கும்.**

அ) தொடர் நிறுவனமாக்கல் ஆ) தேசியமயம் நீக்கல்
இ) இவை அனைத்தும் ஈ) முதலீட்டை திரும்பப் பெறுதல்

**14) GST யில் அதிகபட்ச வரிவிதிப்பு _______ ஆகும். (ஜீலை 1, 2017 - நாளின்படி)**

அ) 32% ஆ) 18% இ) 28% ஈ) 24%

**15) வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை _______ ஆகும்.**

அ) 100% ஆ) 50% இ) 25% ஈ) 60%

**16) சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை ________ வெளியிடப்பட்டது**

அ) ஏப்ரல் 2000ல் ஆ) ஜீலை 2001ல் இ) ஏப்ரல் 2001ல் ஈ) ஜீலை 2000ல்

**17) புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது.**

அ) வெளிநாட்டு முதலீடு ஆ) வெளிநாட்டு வர்த்தகம்
இ) இவை அனைத்தும் ஈ) வெளிநாட்டு தொழில்நுட்பம்

**18) _______ம் ஆண்டு நிதி தொடர்பான நரசிம்மம் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.**

அ) 1991 ஆ) 1995 இ) 2000 ஈ) 1990

**19) இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் _______ ஏற்படுத்தப்பட்டது.**

அ) சென்னை ஆ) மும்பை இ) காண்ட்லா ஈ) கொச்சி

**20) புதிய வெளிநாட் டு வர்த்தக கொள்கை _______ ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.**

அ) 2000 ஆ) 2015 இ) 2010 ஈ) 2002

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 10 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது**

அ) நுட்பம் ஆ) இரட்டை தன்மை
இ) சமமின்மை ஈ) சார்ந்திருப்பு

**2) 2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன?**

அ) 70 ஆ) 40 இ) 50 ஈ) 60

**3) ஊரக ஏழ்மைக்கான காரணத்தை சுட்டுக.**

அ) அதிக வேலை நிலை ஆ) அதிக முதலீடு
இ) வேளாண்மை சாரா வேலையின்மை ஈ) குறைந்த பணவீச்சு வீதம்

**4) இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான் இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?**

அ) ஆடம் ஸ்மித் ஆ) அமர்தியா சென்

www.Padasalai.Net

இ) சர் மால்கம் டார்லிங் ஈ) காந்தி

**5) இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?**

அ) பாதியளவு ஆ) நான்கில் மூன்று பங்கு

இ) நான்கில் ஒரு பங்கு ஈ) மூன்றில் இரண்டு பங்கு

**6) ஊரகப்பகுதி, ஊரக மக்கள் மற்றும் ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது**

அ) ஊரக வேலைவாய்ப்பு ஆ) ஊரக பொருளியல்

இ) ஊரக பொருளாதாரம் ஈ) ஊரக மேம்பாடு

**7) குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது?**

அ) பருவகால வேலைவாய்ப்பு ஆ) திநந்த வேலைவாய்ப்பு

இ) ஊரக வேலைவாய்ப்பு ஈ) மறைமுக வேலைவாய்ப்பு

**8) எது ஊரக பகுதியை கண்டறியும் பண்பு ________**

அ) குறைந்த மனிதவளம் ஆ) குறைந்த மக்கள் தொகை அடர்த்தி

இ) அதிக மக்கள் தொகை அடர்த்தி ஈ) குறைந்த இயற்கைவளம்

**9) ஊரகச் சாலையில் பயன்பாடாக கருதப்படுவது.**

அ) ஊரக அங்காடி வசதி ஆ) வேலைவாய்ப்பு

இ) ஊரக வளர்ச்சி ஈ) மேற்கூறிய அனைத்தும்

**10) ஊரக பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரி அளவு**

அ) 2200 ஆ) 2100 இ) 2300 ஈ) 2400

**11) தேசிய ஊரக சுகாதாரப்பணி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.**

அ) 2005 ஆ) 2015 இ) 2000 ஈ) 2010

**12) MUDRA வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.**

அ) 2000 ஆ) 2005 இ) 2010 ஈ) 2015

**13) ஊரக தொழிற்சாலைக்கான உதாரணம் தருக.**

அ) பாய் தயாரிக்கும் தொழில் ஆ) சிமெண்ட் தொழில்

இ) சர்க்கரை ஆலைத்தொழில் ஈ) காகிதத் தொழில்

**14) மறைந்திருக்கும் வேலையின்மைக்கு மற்றொரு பெயர் என்ன?**

அ) திறந்த ஆ) ஊரக இ) பருவ கால ஈ) மறைமுக

**15) எது ஊரக பகுதியின் அடிப்படை அலகாகக் கருதப்படுவது ________**

அ) பஞ்சாயத்து ஆ) நகரம் இ) வருவாய் கிராமம் ஈ) நகராட்சி

**16) ஊரகப் பொருளாதாரத்தில் வேளாண்மை பிரச்சனைக்குத் தொடர்புடையதாக கருதப்படுவது**

அ) மோசமான தகவல் தொடர்பு ஆ) மோசமான வங்கி செயல்பாடுகள்

இ) சிறிய அளவு நில உடைமை ஈ) ஊரக ஏழ்மை

**17) இந்தியாவில் ஊரக கடனுக்கு காரணமாக கருதப்படுவது**

அ) ஏழ்மை ஆ) முழுவேலை நிலை

இ) அதிக உற்பத்தி ஈ) அதிக மக்கள் தொகை

**18) தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை**

அ) வேலையின்மை ஆ) சுயவேலை

இ) முழுவேலை ஈ) மறைமுக வேலையின்மை

**19) ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு ________**

அ) ஏற்றதாழ்வு குறைவு ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி

இ) குறைந்த அளவு மக்கள் தொகை ஈ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல்

www.Padasalai.Net

**20) எந்த வருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது?**

அ) 1975 ஆ) 1970 இ) 1980 ஈ) 1965

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 11 – புத்தக வினாக்கள் (Shuffling Order -1)

**1) தமிழ்நாடு எதில் வளமானது?**

அ) மேற்கூறிய அனைத்தும் ஆ) வன வளம் இ) மனித வளம் ஈ)கனிம வளம்

**2) SPIC அமைந்துள்ள இடம்**

அ) புதுக்கோட்டை ஆ) மதுரை இ) சென்னை ஈ)தூத்துக்குடி

**3) பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னணியில் உள்ளது?**

அ) தோட்டப் பயிர்கள் ஆ) தேங்காய் இ) ஏலக்காய் ஈ)வாழைப்பழம்

**4) எந்த பயிர் உற்பத்திக்காக அதிகப் பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறத?**

அ) தேங்காய் ஆ) நெல் இ) நிலக்கடலை ஈ)கரும்பு

**5) மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம்**

அ) 7 ஆ) 2 இ) 6 ஈ)4

**6) சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது?**

அ) மூன்றாம் ஆ) முதல் இ) இரண்டாம் ஈ)நான்காம்

**7) தமிழ்நாட்டின் எம்மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?**

அ) நீலகிரி ஆ) தஞ்சாவூர் இ) திருச்சி ஈ)நாகப்பட்டினம்

**8) எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது?**

அ) பாண்டிச்சேரி ஆ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்

இ) இலட்சத்தீவு ஈ)சண்டிகர்

**9) பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம்**

அ) முதல் ஆ) மூன்றாவது இ) இரண்டாவது ஈ)நான்காவது

**10) எம்மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாகவுள்ளது?**

அ) தேனி ஆ) கடலூர் இ) மதுரை ஈ)அரியலூர்

**11) தென்னக இரயில்வேயின் தலைமையிடம்**

அ) மதுரை ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ)திருச்சி

**12) TICEL ன் பகுதி**

அ) உயிரி பூங்கா ஆ) ஜவுளி பூங்கா இ) இரப்பர் பூங்கா ஈ)உணவு பூங்கா

**13) எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்**

அ) எட்டு ஆ) இரண்டு இ) நான்கு ஈ)ஆறு

**14) சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு மேலாக உள்ளது**

அ) பஞ்சாப் ஆ) மேற்கூறிய அனைத்தும் இ) குஜராத் ஈ)கேரளா

**15) தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?**

அ) வேளாண்மை ஆ) சுரங்கம் இ) பணிகள் ஈ)தொழில் துறை

www.Padasalai.Net

**16) குறு சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம்**

அ) I ஆ) IV இ) III ஈ)II

**17) கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை?**

அ) மதுரை ஆ) திருச்சி இ) கோயம்புத்தூர் ஈ)தூத்துக்குடி

**18) பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்**

அ) ஈரோடு ஆ) திருப்பூர் இ) கரூர் ஈ)கோயம்பத்தூர்

**19) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?**

அ) எ.்கு நகரம் - சேலம்

ஆ) தமிழ்நாட்டின் நுழைவாயில் - தூத்துக்குடி

இ) பம்ப் நகரம் - கோயம்புத்தூர்

ஈ)வீட்டு ஜவளி தயாரிப்பு - ஈரோடு

**20) நீர்பாசனத்தின் முக்கிய ஆதாரம்**

அ) கால்வாய்கள் ஆ) குளங்கள்இ) அணைக்கட்டுகள் ஈ)கிணறுகள்

## 11 ஆம் வகுப்பு - பொருளியல் - பாடம் 12 – புத்தக வினாக்கள் *(Shuffling Order -1)*

**1) தேவை நெகிழ்ச்சி _______ உள்ள விகிதம் ஆகும்.**

அ) நிலையான மற்றும் மாறும் வருவாய்

ஆ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும், மொத்த தேவைச் சார்பிற்கும்

இ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் சராசரி தேவைச் சார்பிற்கும்

ஈ) இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் வருவாய் சார்பிற்கும்

**2) ஒரு சாராத மாறியுடன் கூடிய சார்பு _______ எனப்படுகின்றது.**

அ) இரு மாறிச் சார்பு ஆ) பல மாறிச் சார்பு

இ) ஒரு மாறிச் சார்பு ஈ) பல்லுறுப்புச் சார்பு

**3) _______ இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும்.**

அ) கணிதம் மற்றும் பொருளாதாரம் ஆ) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்

இ) வரைபடங்கள் மற்றும் பொருளாதாரம் ஈ) பொருளாதாரம் மற்றும் சமன்பாடுகள்

**4) நிலையான மதிப்பின் வகையீட்டுக்கெழு மதிப்பு _______ ஆகும்.**

அ) எண்ணிலி (Infinity) ஆ) எண்ணிலியல்ல இ) பூஜ்யம் ஈ) ஒன்று

**5) தேவைக்கோடு அல்லது அளிப்புக் கோடு வரைவதில் _______ பயன்படுத்தப்படுகின்றது.**

அ) அணிகள் ஆ) நுண்கணிதம் இ) பகுமுறை வடிவியல் ஈ) இயற்கணிதம்

**6) $(y-y_1) = m(x\ \ x_1)$ என்பது _______ குறிக்கும்**

அ) வளைகோட்டை ஆ) சாய்வை இ) மாறிலியை ஈ) நேர்கோட்டை

**7) D = 50 - 5P எனக்கொள்க D = 0 எனில், Pயின் மதிப்பு.**

அ) P = 20 ஆ) P = -10 இ) P = 10 ஈ)P = 5

**8) தொகையீடு என்பது _______ என்பதின் தலைகீழ் செயல்பாடாகும்.**

அ) வகையீடு ஆ) கலந்தகலவை இ) கலவை ஈ)வேறுபாடு

**9) நிலை நிற்கும் புள்ளி (State of rest ) _______ எனப்படும்**

www.Padasalai.Net

அ) சமநிலை ஆ) அதிகபட்ச புள்ளி

இ) சமநிலையின்மை ஈ)குறைந்தபட்ச புள்ளி

**10) D = 150- 50P எனில் சாய்வு _______ ஆகும்.**

அ) 5 ஆ) -50 இ) 50 ஈ)-5

**11) மொத்த வருவாய்ச் சார்பின் முதல் வகையீடு _______ ஆகும்.**

அ) இறுதிநிலை வருவாய் ஆ) பூஜ்ஜியம்

இ) இலாபம் ஈ)சராசரி வருவாய்

**12) பொருளியலில் கணிதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் _______**

அ) இர்விங் பிஷர் ஆ) சர் வில்லியம் பெட்டி

இ) ஆடம் ஸ்மித் ஈ)ஜியோவானி செவா

**13) Ctrl + M என்ற ஆணை _______ பயன்படுத்தப்படுகின்றது.**

அ) புதிய நழுமத்தைப் பெற ஆ) நகலெடுக்க

இ) சேமிக்க ஈ) நழுமத்தை நீக்க

**14) ஒரு அணியின் அணிக்கோவை மதிப்பு $\Delta = 0$ என்றால் அச்சார்புகளுக்கு தீர்வு _________**

அ) உண்டு ஆ) கிடையாது இ) எண்ணிலி (infinity) ஈ) பூஜ்யம்

**15) சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் _______ எனப்படும்.**

அ) மாறிலி ஆ) மாறுபாடு இ) சாய்வு விகிதம் ஈ) வெட்டு

**16) Data processing ________ ல் மேற்கொள்ளப்படுகின்றது.**

அ) PC யில் மட்டும் ஆ) கணக்கீடு கருவியில் மட்டும்

இ) விரலி (Pen Drive) ஈ) PC மற்றும் கணக்கீடு கருவி

**17) இரு அளவுகளுக்கு இடையே சமநிலை என்ற சொற்றொடர் _______ குறிக்கின்றது.**

அ) சார்பை ஆ) சமநிலைமை இ) சமமின்மையை ஈ) சமன்பாட்டை

**18) கணித முறையில் வெளிப்படுத்தப்பட்ட மொத்த செலவுச் சார்பில் நிலையான செலவு _______ உறுப்பால் குறிப்பிடப்படும்.**

அ) நடுவான ஆ) அளவு இ) நிலையான மதிப்ப ஈ) விலை

**19) x+y=5. x-y=3 என்றால் x ன் மதிப்பு _______ ஆகும்.**

அ) 4 ஆ) 8 இ) 16 ஈ) 3

**20) X^n என்பதன் வகையீட்டுக்கெழு _______ ஆகும்.**

அ) ஒன்று ஆ) nx(n+1) இ) nx(n-1) ஈ) பூஜ்யம்

www.Padasalai.Net



**Prepared By**
**Mr. K. Madhan Mohan**
**PG Asst Teacher,**
**Govt Higher Secondary School,**
**Kethandapatti,**
**Tirupatthur District**
**Tamilnadu**

www.Padasalai.Net